DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai
**CC. No.119/2025**

**Deposition of LW6 examined as PW5** **Dt. 17.11.2025**

| | |
|---|---|
| Name | மகாராஜன் (உதவி மேலாளர், தரக்கட்டுபாடு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபகழகம்) |
| Father's Name | கணேசன் |
| Village | கள்ளக்குறிச்சி |
| Taluk | கள்ளக்குறிச்சி |
| Age | 58/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 17.11.2025

(Accused 1,2 called absent. U/s. 355 of BNSS petition filed and allowed )

**முதல் விசாரணை**

நான் தற்போது தரக்கட்டுபாடு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபகழகத்தில் உதவி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.10.2023 ம் தேதி மயிலாடுதுறை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபகழகத்தில் உதவி மேலாளராக பணிபுரிந்த போது 30 மூட்டைகளில் 35 கிலோ வீதம் மொத்தம் 1050 கிலோ பொது விநியோக திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அரிசியினை சித்தர்காட்டில் உள்ள வட்டசெயல் முறை கிடங்கில் ஒப்படைக்கபட்ட அரிசியிலிருந்து 650 கிராம் மாதிரி அரிசியினை பகுப்பாய்வுக்காக தர ஆய்வாளர் பாரதிமோகன் என்பவர் என்னிடம் வேண்டுகோள் கடிதத்துடன் கொடுத்தார். அம்மாதிரியை நானும் தரஆய்வாளர் சுதாகர் என்பவரும் பகுப்பாய்வு செய்து பொது விநியோக திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அரிசி தான் என்று சான்று வழங்கியுள்ளேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தில் கைப்பற்றுதல் தரச்சான்றில் உதவி மேலாளராக உள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

*போலீசார் விசாரணையில் பாரதிமோகன் தான் என்னிடம் மாதிரியை* கொடுத்தார் என்ற விபரத்தை நான் போலீசார் விசாரணையில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. மாதிரி அரிசி 650 கிராம்

என்பதை போலீசார் விசாரணையில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். பொதுவாகவே மாதிரி 650 கிராம் தான் கொடுப்பார்கள். பொதுவாக சித்தர்காடு குடோனில் பொதுமக்களுக்காக பொது விநியோகத் திட்டத்தின் கீழ் கொடுக்கப்படும் அரிசியை சேமித்து வைத்திருப்பார்கள் என்றால் சரிதான். நான் வழங்கிய சான்றிதழில் மாதிரி அரிசி பயன்படுத்தத்தக்க காலம் முடிந்த காலவாதியான அரிசியா என்பதை குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. அது காலவாதியான அரிசி இல்லை. அதனால் குறிப்பிட்டுச்சொல்லவில்லை. நான் நேரடியாக சென்று மாதிரி எடுக்கவில்லை என்றால் சரிதான். உயர் அதிகாரிகளின் அழுத்தத்தின் பேரில் பொய்யாக தரச் சான்றிதழ் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. கைப்பற்றப்பட்ட தினத்தில் இருந்து ஐந்து நாட்கள் காலதாமதமாக என்னிடம் மாதிரி கொடுக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பாரதிமோகன் என்னிடம் மாதிரி அரிசி எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு. எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

17-11-25

நீதித்துறை நடுவர் எண்-11
மயிலாடுதுறை